O.S.57-2023

## முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், புதுக்கோட்டை
## அ.வ.எண்.57/2023

வாதி தரப்பு 2வது சாட்சி **ராஜலிங்கம்** என்பவரின் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி திருமதி. அனுராதா, கிரேடு-1 பெஞ்ச் க்ளார்க் என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. ராஜலிங்கம் | வயது | : | 85/2025 |
| தகப்பனார் பெயர் | : | சின்னையா | தாலுகா | : | புதுக்கோட்டை |
| கிராமம் | : | எண்.449, சம்மட்டிவிடுதி | தொழில் | : | கிராம கோவில் பூசாரி |

நாள்-22.07.2025

வா.சா.2 - சாட்சி இன்று திரும்ப அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) வாதி தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு விபரம் எனக்கு தெரியும்.

2) நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் நான்தான் கையெழுத்துக்கள் செய்தேன். நான் அதை படித்து பார்க்கவில்லை. ஆனால் அதை படித்து சொல்லக்கேட்டு நான் கையெழுத்துக்கள் செய்தேன்.

3) வாதி சண்முகவள்ளி எனது தம்பி மகள் என்றால் சரிதான். பிரதிவாதி கருணாநிதி எனது மற்றொரு தம்பி மகன் என்றால் சரிதான்.

4) எங்கள் குடும்பத்தில் நான்தான் மூத்தவர் என்றால் சரிதான். எனது உடன் பிறந்தவர்கள் நான்கு சகோதரர்கள் மற்றும் இரண்டு சகோதரிகள் என்றால் சரிதான்.

5) எனக்கும், இறந்துபோன எனது தம்பி அய்யாக்கண்ணுவிற்கும் அவர் உயிருடன் இருக்கும்போது, வருத்தம் இருந்து வந்தது என்று சொன்னால் இயற்கையாக இருக்கும் வருத்தம் இருந்தது. சாட்சி பின்னர் தாமாக பெரிய வருத்தம் இல்லை என்று தெரிவித்தார்.

6) இந்து வழக்கப்படி ஒரு தாய் இறந்தால் அவரது மூத்த மகன்தான் கொள்ளிவைக்க வேண்டும் என்றும் சொன்னால் சரிதான்.

7) நான் எனது அம்மா இறந்தபோது அவருக்கு நான் கொள்ளி வைக்கவில்லை என்றால் சரிதான். சாட்சி தாமாக யார் கொள்ளி வைத்தார்கள் என்று எனக்கு தெரியாது என்று தெரிவித்தார்.

8) நான் எனது அம்மாவிற்கு கொள்ளி வைக்காததால் எனது தம்பி அய்யாக்கண்ணுதான் எனது அம்மாவிற்கு கொள்ளி வைத்தார் என்று சொன்னால் அது எனக்கு தெரியாது.

9) நான் இந்த வழக்கில் பொய் சாட்சி சொல்வதற்கு வந்திருக்கிறேன் என்று சொல்வது சரியல்ல. வாதி எந்த தேதியில் காவல் நிலையத்திற்கு சென்றார் என்று எனக்கு தெரியுமா என்று கேட்டால், தேதி தெரியாது. ஆனால் காவல் நிலையத்திற்கு சென்றது தெரியும். நானும் அன்று காவல் நிலையத்திற்கு சென்றிருந்தேன்.

10) நான் எனது தம்பி அய்யாக்கண்ணு மீது உள்ள விரோதத்தின் காரணமாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொல்வது சரியல்ல.

11) வாதி சண்முகவள்ளி சொத்தில் பங்கு கேட்டு ஒரு பாகப்பிரிவினை வழக்கு போட்டிருக்கிறார் என்றும், அந்த விபரம் எனக்கு தெரியும் என்றும் சொன்னால் சரிதான். வாதி அந்த வழக்கில் என்னை ஒரு பிரதிவாதியாக சேர்த்துள்ள விபரம் எனக்கு தெரியுமா என்று கேட்டால், எனக்கு தெரியும்.

12) எனது அப்பா சின்னையா இருந்த காலத்திலேயே எங்களுக்குள் பாகப்பிரிவினை பிரித்து கொடுத்துவிட்டார் என்று சொல்வது சரியல்ல.

13) நான் பாகப்பிரிவினை பத்திரம் எதிலும் கையெழுத்து எதுவும் போடவில்லை. என் தகப்பனாரால் பாகப்பிரிவினை எதுவும் எங்களுக்கு செய்து வைக்கவில்லை.

14) இந்த வழக்கிற்காகவும், பிரதிவாதியை தண்டனைக்கு உள்ளாக்க வேண்டும் என்பதற்காகவும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொல்வது சரியல்ல.

15) நான் பூசாரியாக இருக்கும் கோவில் எனது குடும்பத்திற்கு சொந்தமானது என்று சொல்வது சரியல்ல. அது நான் உருவாக்கிய கோவில்.

**மறு விசாரணை - இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
புதுக்கோட்டை.